# துணைக்கு வந்தவர்கள்...

என் வாழ்க்கையைப் பொறுத்தவரை நான் ராஜாவாகவும் வாழ்ந்திருக்கின்றேன். பிச்சைக்காரனாகவும், பைத்தியமாகவும் அலைந்து திரிந்திருக்கின்றேன். சிறு வயதிலிருந்து நான் உத்தியோகத்திற்கு வரும் வரை பட்டினி கிடந்தது இல்லை. மிகவும் செல்லமாக வளர்ந்தேன். கேட்டதெல்லாம் எனக்குக் கிடைத்தது. வீட்டில் மட்டுமல்ல, ஊருக்குள்ளும் உறவுக்குள்ளும்கூட நான் மதிப்புடன் வாழ்ந்தேன். இதனால், என் கால் ஊனம் எனக்குப் பெரிதாக வாட்டியதில்லை. நான் நிறைவாக இருப்பதாகவே எனக்குத் தோன்றியது. அதனால்தான் எதைப் பற்றியும் எப்போதும் நான் கவலைப்பட்டதில்லை. ஆனால்...

'வேலை' என்று வீட்டைவிட்டு நான் வெளியேறிய பிறகுதான் எனக்கு 'நான்' அனாதை என்பதும், 'ஊனம்' என்பதும் உறைக்கத் தொடங்கியது. உரிமையானவர்கள், உறவுக்காரர்கள் உத்தியோகத்தின் மூலம் உறவாடியவர்கள் என எல்லாத் தரப்பிலும் உருவான புறக்கணிப்புகளும், மோதல்களும், தாக்குதல்களும், ஏமாற்றுதல்களும் என்னை தொடர்ந்து வேதனைப்பட வைத்துக்கொண்டிருந்தது. உலகத்தை நான் புரிந்துகொள்ள ஆரம்பித்த போது வாழ்க்கை மீதே எனக்கு வெறுப்பு ஏற்பட்டது. எல்லோருமே நடிப்பது போல எனக்குத் தோன்றியது. அந்த நடிப்புக்கு ஈடு கொடுக்க என் மனம் விரும்பாததால் 'தனிமை' என்னை ஆட்கொண்டது. எனக்குள் சிரிப்பு வந்தது.

பொய்யான இந்த உலகத்தின் மீது எனக்கு ஏற்பட்ட கோபத்தை அடக்க என்னை நானே தண்டித்துக்கொள்ளவும் நேர்ந்தது. இதனால் 'பட்டினி' என்பது பழக்கமானது. என்னை நானே நரகமாக்கிக்கொண்டேன்.

'தாயாக வருவார்கள்' என எதிர்பார்த்த உறவு வந்தவுடன் முதல் வேலையாக என் முகவரியாக, எனக்குத் தாயாக இருந்தவரையும் பிடுங்கிக்கொண்டு, என்னை வனவாசம் அனுப்பியதை என்னால் தாங்க முடியவில்லை. என் முகவரியைப் பறிகொடுத்தபின் எனக்கு நானே பெரிதாகத் தோன்றவில்லை. என் மதிப்பை நானே கெடுத்துக் கொண்டேன்.

உத்தியோகத்திற்கு வந்த பின்னர்தான் நான் அதிகமாகப் பட்டினி கிடந்தேன். ஆடம்பரங்களைத் துறந்து பிச்சைக்காரனாக, பைத்தியமாக வாழ்ந்தேன். சாக்கடையோரங்களில், சாலைகளில் அநாதையாக விழுந்து கிடந்தேன். எத்தனையோ நாட்களில் வாழ்வதே சுமையாகத் தெரிந்தது. எத்தனையோ இரவுகளில் வாழ்வை முடித்துக் கொள்ளும் வெறி என்னை ஆக்கிரமிக்கும்போது இறந்த அப்பா மற்றும் இறந்த முன்னோர்கள் வந்த நான் படுத்திருக்கும் கட்டிலைச் சுற்றி, அமர்ந்து விடிய விடிய பேசிக்கொண்டிருப்பார்கள். இதனால் சாகும் வேகம் மறைந்து வாழும் எண்ணம் மனதுக்குள் வியாபிக்கத் தொடங்கிவிடும்.

★ ★ ★

## தாய் நினைவை மறக்க...

**நா**ன் ஆறு மாதக் குழந்தையாக இருக்கும்போதே என் தாய் பார்வதி இறந்துவிட்டார்களாம். தாய் நினைவை மறக்கடிப்பதற்காகப் பெரிய பெரிய ரப்பர் குதிரைப் பொம்மைகளை வாங்கித் தருவார்கள். அதன் வால் பக்கமாக காற்றை ஊதினால் குதிரைகள் விறைப்பாக நிற்கும். அவைகளைத் தட்டிவிட்டு கை கொட்டிச் சிரிப்பேனாம். தாயை இழந்த நான் வீட்டிலுள்ள எல்லோருக்குமே செல்லப்பிள்ளை. அப்பா வேலை முடிந்து வீடு திரும்பும் போது மடி நிறைய இனிப்புச் சேவுடன் மலை வாழைப் பழமும் வாங்கி வந்து தருவார். நான் உறங்கிவிட்டால் திண்ணையில் உள்ள மாடக்குழியில் வைத்துவிடுவார். காலையில் எழுந்தவுடன் என் முதல் தீனி அவைகள்தான்.

★ ★ ★

## தந்தை பாசம்?

**தா**யை இழந்து, ஊனமான என் மீது அதிகமாகப் பாசம் வைத்துள்ள அவர் அதற்காகவே இரண்டாம் கல்யாணம் செய்துகொள்ளவில்லை. என் பிற்கால வாழ்க்கையை நினைத்து மிகவும் வருத்தப்படுவார். அதனால் என்னிடம் எரிச்சலுடன் நடந்துகொள்வார். ஆனால், இரவில் நான் தூங்கியவுடன் பச்சைக் கலர் உல்லன் போர்வையை எனக்குப் போர்த்தி என்னைத் தட்டிக் கொடுத்துக்

கொண்டிருப்பார். நான் விழித்துக்கொண்டால் விருட்டென்று எழுந்து சென்றுவிடுவார்.

★ ★ ★

## படைத்தவன் தண்ணீர் ஊற்றுவான்...

எனக்குக் கடவுளை நினைத்துப் பார்க்கும்போது ஆச்சரியமாக இருக்கும். அவன் கணக்கே தனி ரகமாக இருக்கும். அவன் படியளக்கும் விதம் நம்மை வியப்பின் உச்சிக்குக் கொண்டு செல்லும். ஒன்றுக்குள் ஒன்றென இணைந்த அவனது படைப்புக்கள் பரவசமூட்டக்கூடியவை. உதாரணமாக எனக்கு அம்மா இல்லை. என் சித்தப்பா-சின்னம்மாவுக்கோ ஆறு குழந்தைகள் பிறந்து இறந்துவிட்டன.

என் வீட்டுக்கு வந்த என் சின்னம்மா தொட்டிலில் கிடந்த என்னை, ''என்கூட வர்றியா?'' எனக் கேட்க, நான் கைகளை நீட்டினேனாம். மறுகணம், என்னை என் சின்னம்மா உத்தமபாளையத்தில் இருந்து தன் ஊரான இராயப்பன்பட்டிக்குத் தூக்கிச் சென்றுவிட்டாராம். இப்போது தாயை இழந்த எனக்கும், பிள்ளைகளைப் பறி கொடுத்துவிட்டுத் தவிக்கும் என் சின்னம்மாவிற்கும் இறைவன் படியளந்து, இருவர் குறைகளையும் போக்கிவிட்டான். இதனால்தான் 'படைச்சவன் தண்ணீர் ஊத்தாமல் போவானா?' என்ற பழமொழி வந்ததோ?

★ ★ ★

# அண்ணன் முதுகில் பவனி...

சிறு வயதிலேயே நான் தாயை இழந்ததால் நான் எல்லோருக்கும் செல்லப்பிள்ளையாக வளர்ந்தேன். என் பாக்கெட்டுகளில் எப்போதும் காசுகள் இருந்துகொண்டே இருக்கும். அதனால் என் அண்ணன் என்னைத் தன் முதுகில் தூக்கிக்கொண்டு பல இடங்களுக்கு அழைத்துச் செல்வார்.

தினம் காலையில் உத்தமபாளையம் ஊருக்கு வெளியே புறாக்கூடு பக்கமுள்ள ஒரு அய்யர் கடைக்குத் தூக்கிச் சென்று நீண்ட ஸ்பெஷல் தோசை வாங்கி வருவார். முறுகலான தோசையானது சட்னி சாம்பார் மற்றும் நாட்டுச் சர்க்கரையுடன் 'கமகம' என்று மணக்கும். தோசையை வீட்டில் கொண்டு வந்து கொடுத்து நான் சாப்பிடும்போது, ''எனக்கும் கொஞ்சம்...'' என்று கேட்டுக் கேட்டு என்னிடம் அண்ணன் வாங்கிச் சாப்பிடுவார். என்னைத் தூக்கிக்கொண்டு என் காசில் சினிமாவுக்கும் அழைத்துச் செல்வார்.

பொதுவாக, எங்கள் குணங்கள் வெவ்வேறானவை. என் குணங்களுக்கு மாறான குணங்களுடையவர். இருந்தாலும் எங்கள் மனங்கள் ஒன்றையொன்று தேடிக் கொண்டிருக்கும். அதுவும் அவர் இறந்தபிறகு அவர் நினைவுகளை நான் சுமந்துகொண்டு அலைகின்றேன். என்னைத் தேடும் உறவை நான் இழந்து தவிக்கின்றேன்.

★ ★ ★

# முகத்தைப் பாரு...

எனக்கு நான்கு வயதானபோது உத்தமபாளையம் பகவதியம்மன் கோயிலருகே பள்ளவாசலுக்கு எதிரேயுள்ள தொடக்கப்பள்ளியில் என்னைச் சேர்த்துவிட்டார்கள்.

அங்கு படிக்கும்போது ஒரு நாள் பள்ளி இடை வேளையில் பள்ளி வாசலில் நண்பர்களுடன் நின்றிருந்தேன். அப்போது பள்ளிக்கு இன்ஸ்பெக்ஷனுக்கு வந்த அதிகாரி வெளியே நின்றுகொண்டிருந்தார். அவர் முகம் பூராவும் அம்மைநோய் வந்த தழும்புகள் வடுக்களாகிப் போயிருந்தன. அதைச் சுட்டிக்காட்டி, கேலி செய்து நண்பர்களுடன் சேர்ந்து சிரித்தேன். திரும்பிப் பார்த்த அதிகாரி, ''திரும்பி வந்து உங்களுக்கும் முகம் பூராவும் இதே போல ஊசி குத்துவோம்'' என்றபடி சென்றுவிட்டார்.

''முகம் பூராவும் ஊசி குத்துவாங்களா?'' — எனக்குப் பயமாக இருந்தது. எனவே, வீட்டுக்கு வந்துவிட்டேன். 'திரும்பவும் எங்கும் படிக்கப் போக மாட்டேன்' என மறுத்துவிட்டு, வீட்டிலேயே இருந்தேன்.

''ஏண்டா கேலி செய்தோம்?'' என்றிருந்தது. ஒரு நாள் ரோட்டில் நின்றுகொண்டிருந்தபோது பள்ளிக்கு பைகளைச் சுமந்தபடி நிறைய பேர் சென்று கொண்டு இருந்தனர். மறுகணம் வீட்டுக்கு வந்த நான், ''உடனே பள்ளிக்குப் போறேன்'' என அழுதேன். வீட்டிலும் என்னை வேறு பள்ளியில் சேர்த்தனர்.

★ ★ ★

# அம்மை ஊசியா? வர மாட்டேன்...

உத்தமபாளையம் தேரடித் தெருவில் இருந்த உயர் தொடக்கப் பள்ளியில் மீண்டும் என்னைக்கொண்டு போய் ஒன்றாம் வகுப்பில் சேர்த்துவிட்டார்கள். அந்தப் பள்ளியில் தலைமையாசிரியர் அலுவலகம் மற்றும் முக்கிய அலுவலக அறைகள், விளையாட்டு மைதானம், சில வகுப்புக்கள் தெருப் பக்கம் பார்த்தபடி இயங்கியது. ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை பக்கத்துச் சந்திலுள்ள பெரிய கட்டிடத்தில் இயங்கி வந்தது. தினம் இங்குள்ளவர்கள் தலைமையாசிரியர் அலுவலகம் முன்புள்ள மைதானத்திற்கு வந்து கூடி நின்று கடவுள் வாழ்த்துப் பாடிவிட்டுத் திரும்பி வருவர்.

ஒரு நாள் மைதானத்தில் வைத்து அம்மை ஊசி போட்டுக்கொண்டிருந்தனர். அந்தக் கட்டிடத்தில் உள்ளவர்கள் மைதானத்திற்கு ஊசி போட்டுக்கொள்ளச் சென்றனர். எனக்கு அம்மை ஊசி என்றால் பயம். எனவே, ஒன்றாம் வகுப்பு மாணவர்களை 'வகுப்புத் தலைவன்' என்ற முறையில் வரிசைப்படுத்தி அனுப்பிவிட்டு பக்கத்து சந்து வழியே வீட்டுக்கு விரைந்தேன்.

என்னைப் பார்த்துவிட்டு மாணவர்கள் விரட்டிக் கொண்டு வந்தனர். எங்கள் வீட்டுக்குச் சற்றுத் தள்ளியிருந்த நற்குணம் டாக்டர் வீட்டருகே உட்கார்ந்திருந்த மிட்டாய்க் காரர் என்னை நிறுத்தி, அவரருகில் என்னை உட்கார வைத்துக்கொண்டு, என்னை விரட்டி வந்தவர்களை விரட்டிவிட்டார்.

அவர் ஒரு 'கிளி ஜோஸ்யர் பெட்டி' மாதிரி வைத்திருப்பார். அதன் ஒரு பக்கம் ஒரு பலகையைச் சாய்த்து வைத்திருப்பார். அந்த அட்டையில் எழுதப் பட்டிருக்கும் எண்கள் மீது நிறைய ஆணிகள் அறையப் பட்டுருக்கும். அந்தப் பெட்டியின் பக்கவாட்டில் ஒரு துவாரம் இருக்கும். பெட்டியின் மேற்புறம் இருக்கும் உண்டியல் போன்ற துவாரத்தில் காசைப் போட்டால் பக்கவாட்டில் உள்ள துவாரம் வழியே ஒரு கோலிக்குண்டு பாய்ந்து வரும். அந்தக் குண்டு ஆணிகளால் தடுத்து நிறுத்தப்பட்டால் அந்த இடத்திலிருக்கும் எண் அளவு பக்கத்தில் வைக்கப்பட்டிருக்கும் சீசாவில் உள்ள ஆரஞ்சு மிட்டாய்கள் கிடைக்கும்.

நான் அவரது வாடிக்கையாளன். எனவே, நான் அவரிடம் காசு கடன் வாங்கி விளையாடுவேன். அப்படி விளையாடிவிட்டு வீட்டுக்குத் திரும்பினேன். எதிர்வீட்டில் உள்ள கல்பனா ஊசி போட மறுத்து அழுது கொண்டு இருந்தாள். அவளைச் சமாதானப்படுத்த அவள் பாட்டி சரஸ்வதியம்மாள் என்னை இழுத்து வைத்து என் கையைப் பிடித்து, ''இங்கே பாரு, நம்ம ரெங்கன் ஊசி போட்டுக் கொண்டு வந்து அழாமல் சமத்தா வந்திருக்கான் பாரு'' என்று கூறினாள். ஆனால் என் கையில் ஊசி குத்திய அடையாளமில்லை. அதைக் கண்ட என் அண்ணன் என்னைத் தூக்கிச் சென்று ஊசி போட்டுக்கொண்டு வந்தார். ஒரு ஊசிக்கு அன்று பயந்த எனக்கு இன்று நிறைய ஊசி போடுறாங்க.

★ ★ ★

## பகவதியம்மன் கோயில் திருவிழா...

உத்தமபாளையம் பகவதியம்மன் கோயில் திருவிழா வெகு விமரிசையாக நடைபெறும். தினமும் எருமைக் கிடா சுற்றி வரும். அதன் முன்னால் பூசாரியும் சாமியாடியும் வருவார்கள். பூசாரிக்கும் எருமைக் கிடாவுக்கும் மஞ்சள் நீர் ஊற்றி மக்கள் வழிபடுவர். பூசாரியிடம் குறியும் கேட்பர். இரவில் சாமி சிலைகள் அலங்கரிக்கப்பட்டு ஊர்வலமாக எடுத்து வரப்படும். கூடவே கரகாட்டம், சிலம்பாட்டம், நடனம், நாதஸ்வரம் என அமர்க்களப்படும்.

நாங்கள் எதிர்ப்புறமுள்ள மச்சு வீடு, சரஸ்வதி யம்மாள் வீட்டு மாடிகளுக்குப் பட்சணங்களுடன் சென்று சாப்பிட்டபடி சாமி ஊர்வலத்தைக் கண்டுகளிப்போம். இரவு நேரத்தில் மாடியில் கூட்டமாக நின்று கீழே சாலையில் செல்லும் சாமி ஊர்வலத்தைப் பார்ப்பது மிகவும் ரம்மியமாக இருக்கும்.

★ ★ ★

## பாத காணிக்கை...

உத்தமபாளையத்தில் எங்கள் உறவினர் குழந்தை வேல் பிள்ளை வருடம் தவறாமல் சபரிமலை சென்று திரும்புவார். அப்போது இப்போது இருப்பது போல வசதிகள் இல்லாததால் கொடிய விலங்குகள் நிறைந்த வனம் வழியே நடந்தே செல்ல வேண்டும். மிருகங்களால் ஆபத்து நேரிடும் என்பதால் 'திரும்பி வருவோமா?' என்ற

சந்தேகத்தில் வாய்க்கரிசி போட்டுக்கொண்டு செல்வர். அதனால் சபரிமலையானைத் தரிசத்து வந்த அவரது பாதங்களுக்கு மக்கள் தம் வணக்கத்தைக் காணிக்கையாக்குவர்.

★ ★ ★

# ஒத்தைப் புளியமரம்...

இராயப்பன்பட்டியில் எங்கள் தெருவிலிருக்கும் இரண்டு குடும்பங்கள் வீட்டில் கஞ்சிக்கு இல்லாவிட்டாலும் தினமும் மொத்தமாகச் சினிமாவுக்குப் போய்விடுவார்கள். ஒரு படத்தை இரண்டு, மூன்று தடவைகூடப் பார்ப்பார்கள். சில நேரங்களில் அவர்கள் என் அம்மாவை வற்புறுத்திக் கூட்டிச் செல்வார்கள். அம்மா என்னையும் அழைத்துச் செல்வார்.

எங்கள் ஊரிலிருந்து ஒரு பர்லாங் தூரத்தில் ஆனைமலையான்பட்டியில்தான் ஸ்ரீ முருகன் தியேட்டர் எனும் கீற்றுக்கொட்டகை இருந்தது. அதை நோக்கி எல்லோரும் செல்வோம். அவர்களுக்கு முன்னால் நான் விரைந்து செல்வேன். அதில் எனக்குப் பெருமையாக இருக்கும். ஆனால், ஒத்தைப் புளியமரம் வந்தவுடன், ‘‘இந்த இடத்தில் பேய்கள் இருக்குனு சொன்னாங்களே. ஓடைத் தண்ணீர் இந்த இடத்தில்தான் தாத்தாவை இழுத்து வந்து போட்டதாகச் சொல்வாங்களே’’ என்ற நினைப்பு வரும். அப்படியே நின்றுவிடுவேன். அம்மா வந்தவுடன் அவர்களுடன் சேர்ந்து அந்த இடத்தைக் கடப்பேன். தியேட்டரில் மணலைக் குவித்து அதன் மீது உட்கார்ந்து

படம் பார்ப்பேன். 'எப்போது எப்படிச் சாப்பிடுவது?' எனத் தெரியாமல் கொண்டு சென்ற எள்ளுருண்டையைத் திருப்பிக்கொண்டு வந்துவிடுவேன்.

★ ★ ★

## என்றும் 16 வயது...?

**எ**ங்கள் ஊரில் ஒரு பெண் இருந்தாள். எப்பொழுதும் இளமையுடன் அழகாக இருக்க விரும்புவாள். தன் புருஷனைக்கூடத் தன்னைத் தொடவிட மாட்டாள். குழந்தை பிறந்தால் அழகு கெட்டுவிடும் என எண்ணினாள். ஆனால், குழந்தை பெற்றுக்கொள்ள வேண்டிய நிலை உருவாகிவிட்டது. 'குழந்தைக்குத் தாய்ப்பாலை ஊட்டினால் அழகு கெட்டுவிடும்' என்று குழந்தைக்குப் புட்டிப்பால் ஊட்டினாள். அதுவும் அவள் மாமியார்தான் ஊட்டி வளர்த்தாள். குழந்தைக்கு ஆறு வயதாகும்போது, அந்த வயதில் தனக்கு ஒரு குழந்தை இருக்கு என்று சொல்லவே வெட்கப்பட்டாள். எனவே, அக்குழந்தை அவளை 'அக்கா' என்றே கூப்பிட்டது. அதாவது குழந்தையை அப்படிக் கூப்பிடப் பழக்கிவிட்டாள் அவள்.

★ ★ ★

## காது பிரச்சனை

**எ**ங்கள் வீட்டுக்கு எதிர்வீட்டுப் பெண் காது வளர்த்து தண்டட்டி போட்டிருப்பாள். இது அவள் புருஷனுக்குப்

பிடிக்கவில்லை. ''இப்பத்தான் காது வளர்த்தவங்களெல்லாம் காதை அறுத்து ஒட்டவைத்து ஓலைகளைப் போட ஆரம்பிச்சிட்டாங்களே... நீயும் அதே போல் செய்தால் நாகரிகமாக இருக்கும்'' என்றான். அவள் கேட்கவில்லை. இதனால் தினமும் சண்டை. ஒரு நாள் சண்டையின்போது காது அறுந்துவிட்டது. அறுத்து ஒட்டவும் வைத்து விட்டாள். இருந்தாலும் சண்டை ஓயவில்லை. புருஷன் அறுத்துவிட்டதாகச் சண்டை.

★ ★ ★

## நானும் வேலை பார்க்கின்றேன்...

இராயப்பன்பட்டியில் எங்கள் தெருவிலுள்ள ஒரு வீட்டுக்கு நான் சிறு வயதாக இருக்கும்போது பால் வாங்கச் செல்வேன். அந்த வீட்டிலுள்ள கணவனும் மனைவியும் ஆசிரியர்களாக இருப்பவர்கள். அந்த டீச்சருக்குச் சமைக்கத் தெரியாது. தன் அம்மா சமைத்ததை தட்டில் போட்டுத் தூக்கி வந்து கணவர் முன்னால் வைப்பார். தட்டை சத்தம் வரும்படி கீழே வைத்துவிட்டால் வாத்தியாருக்குக் கோபம் வந்துவிடும். தட்டைத் தள்ளிவிடுவார். திட்டுவார். உடனே டீச்சருக்குக் கோபம் வந்துவிடும். ''நானும் வேலை பார்க்கிறேன்'' என்று கூறி எகிறுவாள். சண்டை முற்றி, நான் இருப்பதையும் மறந்து, ஒருவர் அரிவாளைத் தூக்குவார். மற்றொருவர் விறகுக் கட்டையைத் தூக்குவார்.

இந்நிகழ்வு சிறுவனாகிய என் மனதில் ஆழமாகப் பதிந்துவிட்டது. பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பின் படித்து முடித்து, உசிலம்பட்டியில் ஒரு வங்கியில் நான் பணிபுரியும்போது, 'தினமலர்' நாளிதழில் 'படித்த பெண்களுக்குக் கிராக்கி' எனும் ஒரு கட்டுரையை எழுதினேன். அந்தக் கட்டுரையின் உள்ளே ஓரிடத்தில் இந்தச் சம்பவத்தையும் இணைத்திருந்தேன்.

★ ★ ★

# மிளகாயைப் பொறுக்கிப் போடு

**நா**ன் இராயப்பன்பட்டியில் பள்ளியில் படிக்கும்போது விடுமுறை தினம் மற்றும் ஓய்வு நேரங்களில் எங்கள் வீட்டிலுள்ள கடையில் சுண்டல் விற்றுக் கொண் டிருப்பேன். அப்போது, 'கிறுக்கு மேரி' என்பவர் நிறைய சாராயம் குடித்துவிட்டு வருவார். கையில் நீளப் பிரம்பு இருக்கும். சட்டை போடாத கட்டுக்கோப்பான உடம்பில் எண்ணெய் தடவியிருப்பார். கையில் காப்பு போட்டிருப்பார். கைவிரல்களில் இரும்பு மற்றும் வெள்ளி மோதிரங்கள் போட்டிருப்பார். கணுக்கையில் காசிக்கயிறு கட்டி இருப்பார். தோளில் சாமிகள் மற்றும் பாம்புப் படங்களைப் பச்சை குத்தியிருப்பார். பெரிய முறுக்கு மீசை வைத்திருப் பார். இருந்தாலும் நாங்கள் விற்க வைத்திருக்கும் சுண்டலில் கிடக்கும் மிளகாய்கள் முழுவதையும் பொறுக்கித் தனக்குத் தரும்படி மிகவும் பாவமாகக் கெஞ்சுவார்.

சாராயம் குடித்ததற்கு மிளகாயின் காரம் சுவையாக இருக்குமாம்.

★ ★ ★

## நம்ம வண்டியை எடுத்து வந்திருக்கலாம்ல?

ஒரு தடவை சின்னமனூர் புகழகிரி டாக்கீஸில் படம் பார்க்க முருகன், ஆறுமுகம் ஆகியோருடன் சென்று வாசலில் காத்திருந்தபோது, ''ச்சே... இந்தத் தகர டப்பா பஸ்ஸில் வரணும்ன்னு நம்ம தலையெழுத்து. பேசாமல் நம்ம வண்டியை எடுத்து வந்திருக்கலாம்'' என்றான் முருகன். நாங்களும் முருகனுக்கு ஜால்ரா போட்டோம். நாங்கள் பேசுவது பொய் என்பதை உணராமல், சுற்றி இருந்தவர்கள் எங்களை வியப்புடன் பார்த்தனர்.

★ ★ ★

## செய்திகள் வாசிப்பது...

தொலைக்காட்சி வராத காலத்தில் வானொலிதான் பிரபலம். சில பணக்கார வீடுகளில்தான் இது இருக்கும். இராயப்பன்பட்டியில் வடக்குத் தெருவைப் பொறுத்தவரை அய்யணன் ஆசாரி வீட்டில்தான் வானொலி இருக்கும். தேர்தல் நேரங்களில் தேர்தல் முடிவுகள் கேட்க வருபவர் களுக்காக வீட்டு ஜன்னலைத் திறந்துவிட்டு வானொலியில்

செய்திகளைப் போட்டுவிடுவார். தெருவில் ஆட்கள் கூடி நின்று இந்தச் செய்தியைக் கேட்பர். ஆனால், இன்று தொலைக்காட்சி இல்லாத வீடுகளே இல்லை.

★ ★ ★

## சினிமா விளம்பரம்

இராயப்பன்பட்டிக்கு அருகிலுள்ள ஆனமலையான் பட்டியில் இருந்த சினிமா தியேட்டரிலிருந்து (*கீற்றுக் கெட்டகை*) கூட்டு வண்டியில் விளம்பரம் செய்து கொண்டு வருவார்கள். 'பிட்' நோட்டீஸ்களும் விநியோகித்து வருவர். அந்த வண்டியில் அமர்ந்து மைக்கில் விளம்பரம் செய்துகொண்டு வரும் பொன்னையா என்பவர் தீவிர எம்.ஜி.ஆர். ரசிகர். எனவே, எம்.ஜி.ஆர். படங்கள் வந்தால் எம்.ஜி.ஆருக்குப் பட்டங்கள் சூட்டி வர்ணித்துக் கொண்டே போவார். இவர் வர்ணனையைக் கேட்பதற் கென்றே பெண்கள் கூட்டம் அலைமோதும். இந்தத் தியேட்டரை முதலில் இராயப்பன்பட்டியில்தான் கட்டுவதாக இருந்தது. 'சினிமா கொட்டகை வந்தால் இங்குள்ள கிறிஸ்துவர்கள் கெட்டுவிடுவார்கள்' எனக் கிறிஸ்தவர்கள் எதிர்ப்பு கிளப்பவே தியேட்டர் அருகிலுள்ள ஆனைமலை யான்பட்டிக்குச் சென்றுவிட்டது. ஆனால், படம் பார்ப்பவர்களின் பெரும்பான்மையோர் இராயப்பன்பட்டி கிறிஸ்தவர்கள்தான். இதன் வருமானமோ கோகிலாபுரம் பஞ்சாயத்துக்குச் சென்றது.

★ ★ ★

## நீ சம்பாதிச்சுப் போட்டு நான் சாப்பிடவா...?

என் அப்பாவுக்குப் பொய் சொன்னால் சிறிதும் பிடிக்காது. அவரை எதிரி போல் நினைத்துப் பேசாமலும் ஒதுங்கிவிடுவார். ஒரு முறை உத்தமபாளையத்திலிருந்து இராயப்பன்பட்டிக்கு வெற்றிலைச் சுமை கொண்டு வரும்போது உத்தமபாளையம் ஸ்ரீ ஞானம்மன் கோயிலின் ஆற்றைத் தாண்டி கோகிலாபுரம் வழியே இராயப்பன்பட்டி வருவார். அப்படி ஒரு நாள் ஆற்றைக் கடக்கும்போது கோகிலாபுரம் ஆற்றங்கரையில் ஒரு மண்டபத்தில் அண்ணன் சீட்டாடிக்கொண்டிருப்பதைக் கண்டும் காணாமல் வீட்டுக்கு வந்துவிட்டார்.

அண்ணன் வீட்டுக்கு வந்தவுடன் அப்பா சப்தம் போட்டார். ''நான் சீட்டாடியதாக யார் சொன்னாங்க?'' என அண்ணன் எகிறினார்.

உடனே அப்பா, ''யார் வந்து சொல்லணும்? நானே என் இரு கண்களால் பார்த்தேன். பொய்யா பேசுறே? என் முகத்தில் முழிக்காதே'' எனக் கத்தினார்.

''நான் போறேன். ஆனால் நான் சம்பாதிச்சுப் போடுவேன் என்று மட்டும் கனவு காண வேண்டாம்'' என அண்ணனும் கத்தினார்.

மறுகணம், ''நீ சம்பாதிச்சுப் போட்டு அதில் நான் சாப்பிடுவேனா? அதுக்குப் பேசாம செத்துப்போயிடுவேன்'' என்றார் அப்பா.

அது போலவே அப்பா இறக்கும்போது அண்ணன் டி. கல்லுப்பட்டியில் ஆசிரியர் பயிற்சித் தேர்வு எழுதிக்

கொண்டிருந்தார். ''இந்த நேரத்தில் தேர்வு எழுதாமல் வந்தால் மீண்டும் ஒரு வருடம் படிக்கணும். எனவே தகவல் சொல்ல வேண்டாம்'' என அம்மா சொல்லிவிட்டது. அதனால் தகவல் சொல்லவில்லை. அவரும் வரவில்லை.

ஒரு வாரம் கழித்து அவர் வந்தபோது செய்தியறிந்து, ''அப்பா, அப்பா'' என அலறியபடி கீழே விழுந்து உருண்டார். ஆக, ஏதோ கோபத்தில் சொன்னாலும் இருவர் வாக்கும் எப்படியோ பலித்துவிட்டது. அண்ணன் கீழே விழுந்து அழுது புரண்டது, என் மனதைவிட்டு மறைய மறுக்கின்றது.

★ ★ ★

# தலையில் குட்டு...?

இராயப்பன்பட்டியிலுள்ள சவரியப்ப உடையார் நினைவு உயர்நிலைப் பள்ளியில் நான் எட்டாம் வகுப்பு படிக்கும்போது 'கு.சி.' எனும் கு. சின்னராசு என்பவர் தமிழாசிரியராக இருந்தார். அவர் தமிழ் வகுப்பில் உள்ள மாணவர்களை இரண்டு பகுதிகளாகப் பிரித்தார். ஒரு பகுதியிலுள்ள மாணவர்கள், மற்றொரு பகுதியிலுள்ள மாணவர்களைப் பார்த்து கேள்விகள் கேட்க வேண்டும். யாருக்கும் பதில் தெரியாவிட்டால் கேள்வி கேட்டவரே பதில் சொல்ல வேண்டும். அவர் பதில் சொல்லிவிட்டால் எதிர்ப் பகுதியில் எத்தனை பேர் உள்ளனரோ, அத்தனை பாயின்ட் கேள்வி கேட்டவர் பகுதியைச் சேரும். கேள்வி கேட்டவருக்கும் பதில் தெரியாவிட்டால் அத்தனை

## ஸ்டடி ஹால்?

சிறு வயதில் இராயப்பன்பட்டியில் அலோசியஸ் உயர்நிலைப்பள்ளியில் படிக்கும்போது தினமும் காலையில் 4½ மணிக்கும் மாலை 5 மணிக்கும் பள்ளியில் நடக்கும் ஸ்டடி ஹாலுக்குச் சென்று அமைதியான அந்த வேளையில் படிக்க, வீட்டுப் பாடங்களை முடிக்க நன்கு வசதியாக இருக்கும். அங்கிருக்கும் சில ஆசிரியர்களிடம் சந்தேகங்களைக் கேட்டுக்கொள்ளலாம். வேப்பமரக் காற்றும் புறாக்களின குரலும் ரம்மியமாக இருக்கும். அங்குள்ள சர்ச்சில் ஜெபம் தெரியாவிட்டாலும் ஜெபம் சொல்பவர்களுடன் சேர்ந்து மண்டியிடுவேன். ஆனால், இன்று பணம் தந்து ட்யூசனுக்குப் போக வேண்டிய நிலை உள்ளது.

★ ★ ★

## தறி வாத்தியார்...

இராயப்பன்பட்டி அலோசியஸ் உயர்நிலைப் பள்ளியில் இரண்டாம் வகுப்பு முதல் ஆறாம் வகுப்பு வரை படித்தபோது ஆனைமலையான்பட்டியைச் சேர்ந்தவர் தறி வாத்தியாராக இருந்தார். அவர் ஒழுக்க வகுப்புகளும் நடத்துவார். தக்ளியிலும், ராட்டையிலும் நூல் நூற்கச் சொல்லித் தருவார். ஓய்வு நேரத்தில் அங்குள்ள தறியில் ஆடைகளும் நெய்வார். வெளிநாடுகளில் இருந்து பாதிரியார்கள் மூலம் வரும் பால் பவுடர், சூரியகாந்தி

எண்ணெய், கோதுமை, மக்காச் சோளம் ஆகியவற்றை ஏழைகளுக்கு விநியோகம் செய்வார். அவருக்கு என் மீது அலாதிப் பிரியம். அவர் மரப்பெட்டி ஒன்றை வைத்திருப்பார். அதன் சாவியை என்னிடம்தான் கொடுத்து வைத்திருப்பார். அது எனக்குப் பெருமையாக இருக்கும்.

★ ★ ★

## பரீட்சையில் தேறுவது எப்படி?

**எ**ன் சித்தப்பா மகன் முருகன், ''பரீட்சையில் தேறுவது எப்படி?'' என்னும் புத்தகம் வைத்திருந்தார். அதை நான் கேட்டு வாங்கி வந்து படித்துவிட்டு தறி வாத்தியார் பெட்டியில் வைத்திருந்தேன். அதை எப்படியோ கண்டுவிட்ட அமல்ராஜ் வாத்தியார் அந்தப் புத்தகத்தைப் படித்துவிட்டுத் தருவதாகக் கூறி எடுத்துச் சென்றுவிட்டார். அதைத் திருப்பித் தரவில்லை. ஆனால், முருகனோ அந்தப் புத்தகம் வேறொருவருடையது எனக் கூறி அதன் கிரயமான ரூ. 3/-ஐ வாங்கிவிட்டார். என் உண்டியலை உடைத்து அந்தப் பணத்தைத் தந்தேன்.

★ ★ ★

## எம்.ஜி.ஆரா...? சிவாஜியா...?

**இ**ராயப்பன்பட்டியில் என் மாமா பிள்ளைகளில் மூத்தவர் படிக்காதவர். எம்.ஜி.ஆர். வெறியர். எம்.ஜி.ஆர்.

மீது உயிரையே வைத்திருப்பார். யாரையும் எம்.ஜி.ஆர். பற்றிக் குறை சொல்ல அனுமதிக்க மாட்டார். எம்.ஜி.ஆர். பற்றிப் பேச ஆரம்பித்துவிட்டால் சாப்பிடக்கூட மறந்து விடுவார். எம்.ஜி.ஆர். நடித்த படப்பெயர்கள் மற்றும் அவர் நடித்த திரைப்படங்களில் இடம்பெற்ற பாடல்களின் வரிகளை வைத்தே பட்டம் சூட்டி எம்.ஜி.ஆரைப் புகழ்ந்து தள்ளிவிடுவார். அவர் படங்கள் வெளியாகும்போது அப்படத்தில் வரும் எம்.ஜி.ஆரின் ஸ்டைலான படங்களை வாங்கி வந்து, வீட்டின் முன் ஹாலில் எல்லோரும் பார்க்கும் வண்ணம் மாட்டிவிடுவார்.

அவருக்கு அடுத்த தம்பியோ படித்தவர். ஆனால், அவருக்கு நேர் எதிர்மறை. தீவிர சிவாஜி வெறியர். சிவாஜி படம் என்றால் தவறாமல் சென்று பார்த்து விடுவார். சிவாஜி படங்களைப் பற்றிய எல்லாப் புள்ளி விவரங்களும் அவருக்கு அத்துப்படி. அண்ணன் எம்.ஜி.ஆர். படத்தைக்கொண்டு வந்து மாட்டியவுடன், அந்த ஸ்டைலில் சிவாஜி படத்தை எடுத்து வந்து அருகில் மாட்டிவிடுவார். சிவாஜியும், எம்.ஜி.ஆரும் கொடி கட்டிப் பறந்த அன்று இருவரது ரசிகர்களும் மோதிக் கொள்வதைப் போலவே இந்த வீட்டிலும் நடக்கும். ஆனால், விரைவில் சகஜ நிலைக்கு வந்துவிடுவார்கள்.

★ ★ ★

## தலைக்கனம் ஏறிப்போச்சு...?

இராயப்பன்பட்டியில் இருந்த சவரியப்ப உடையார் உயர்நிலைப் பள்ளியில் 1968ம் ஆண்டில் பத்தாம் வகுப்பு